29.08.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணைதொடர்ச்சி (அ.வ..எண். 112/2019) திரு.பாலகிருஷ்ணன்.

<u>முதல் விசாரணை தொடர்ச்சி–</u>

| | |
|---|---|
| 1 | மந்தித்தோப்பு கிராமத்தில் செட்டில்மெண்ட் ரிஜிஸ்தர் நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 03.01.1996 தேதியிட்ட கருப்பசாமி செட்டியாருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் சப்ரி நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | கருப்பசாமி செட்டியார் என்பவரது இறப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | கருப்பசாமி செட்டியார் என்பவரது வாரீசு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | தபசில் சொத்தைப்பொறுத்து பட்டா எண்.2045 ல் கருப்பசாமி செட்டியார் வாரீசுகளான மாரியப்பன், நாகரத்தினம், கணேசன், குமரேசன், மற்றும் ராஜேஸ்வரி ஆகியோர்கள் பெயரில் உள்ள பட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | தபசில் சொத்தை பொறுத்து பட்டா எண்.2124 கணேசன் என்பவரின் பெயரிலுள்ள பட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | கணேசன் என்பவர் பாலகிருஷ்ணன் என்பவருக்கு 21.01.2008 ம் தேதியிட்ட எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சப்ரி நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 8 | தபசில் சொத்தை பொறுத்து 2159 ல் பாலகிருஷ்ணன் என்பவரின் பெயரில் உள்ள பட்டா வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 9 | பாலகிருஷ்ணன் என்பவர் வாதி வேலுச்சாமிக்கு 29.06.2008 அன்று எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 10 | தபசில் சொத்தை பொறுத்து பட்டா நகல் இணையதள பதிவிறக்க நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
29.08.2024.